(எ) புதுக்கோட்டை அருகே மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதால் தொழிலாளி மரணம் குறித்து

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, நான் இரண்டு வாரங்களுக்கு முன்பாக புதுக்கோட்டை நகரத்தில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் குளுகோசுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஏற்றியதன் பயனாக ஒரு தொழிலாளி மரணம் அடைந்தது குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் குறித்தும் விவாதிக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன். மரணமடைந்த அந்த நபரின் குடும்பம் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. யாரும் காப்பாற்ற முடியாத நிலை இருக்கிறது. எனவே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவரது குடும்பத்திற்கு நிதி ஒதுக்க தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அனுமதிக்கப்பட்ட தாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ கடிதம் வந்துள்ளதா? நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தால் அதை இங்கே எழுப்பக் கூடாது. இன்னும் பதில் வராமல் இருப்பதைப்பற்றித் தான் எழுப்ப வேண்டுமே தவிர நிராகரிக்கப்பட்ட விஷயத்தை இங்கே சொல்லக் கூடாது.

திரு, கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்ததைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் மழையினாலும், வெள்ளத்தினாலும்....   ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு விடுங்கள்.

(ஏ) டி. வி. எஸ். நிறுவனத்தின் தொழிலாளர் உண்ணாவிரதம் குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, கடந்த ஐந்து நாட்களாக டி.வி.எஸ். நிறுவனத்தின் தொழிலாளர்கள் உண்ணா விரதம் இருக்க முயற்சி செய்து கைது செய்யப்பட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டு இன்றைக்குச் சிறைச்சாலையில் அடைக்கப்பட் டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை இப்பொழுது வாபஸ் வாங்கு வதற்குத் தயாராக இருக்குமா என்பதோடு, ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட அடிப்படையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ கையில் இல்லாமல் எழுப்பிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்.